ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1203/9 – 2001 සැප්තැම්බර් 24 වැනි සඳුදා – 2001.09.24
1203 / 9 ஆம் இலக்கம் – 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ.- பீ. 21/78.

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ம் இலக்க பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு.

கொழும்பு,
09.12.2001.

**கட்டளைச் சட்டம்**

1. இக் கட்டளைச் சட்டம் 2001 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மருத்துவ பட்டப் பின்படிப்பு நிருவக (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்பட்டதன் மேல் வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. இரண்டாயிரமாம் ஆண்டு ஒக்டோபர் 27 ந் திகதி 1155/20ஆம் இலக்க *அதிவிசேஷ கசெற்றில்* வெளியிடப்பட்ட 2000ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவக (திருத்தக்) கட்டளைச் சட்டத்தினால் கடைசியாக திருத்தப்பட்டவாறானதும், 1980 ஆம் ஆண்டின் ஏப்ரல் 10 ந் திகதிய 83/7 ஆம் இலக்க, *அதிவிஷேட கசெற்றில்* வெளியிடப்பட்டதுமான 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மருத்துவப் பட்டப் படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டம், இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அதன் 13 ஆம் பந்தியில், (ண) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் உப்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் -

"(த) மேகநோயியல்";

(2) அதன் 14 ஆம் பந்தியில் :-

(i) அப் பந்தியின் (2) (2) (iii) என்னும் உப்பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் -

"(iii) பிணியாய் நிலையஞ் சார் புற்று நோயியல் மற்றும் மேக நோயியல் சிறப்புக் கூறு தொடர்பில், (2) (இ) (i) என்னும் உப்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களிலிருந்து ஒன்பது பிரதிநிதிகள் ; அவர்களில் குறைந்த பட்சம் மூவராவது பின்வரும் பிரதான பயிற்சி நிலையங்களிலிருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும் :-

(அ) மகரகம புற்றுநோய் நிருவகம் ; அத்துடன்

(ஆ) மத்திய எஸ். ரீ. டி. பிணியாய் நிலையம்.".